புதிய சமதர்மம்
புதிய உலகம் படைப்போம்
පුදීය සමධර්මම් Puthiya samadharam
143/3 கீயு வீதி கொழும்பு.02
தொ.பேசி.0112430621 தொ.மடல்.0112305963
ஈமெயில்: putiyasamadarmam143@gmail.com
இணையத்தளம்: www.nssp.info
பதிவு செய்யப்பட்ட செய்தி பத்திரிகையாகும்

## தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இந்திய இடதுசாரிகளுடனான சந்திப்பு

முதல் முறையாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஒரு அமைப்பாகச் சென்று இந்திய இடதுசாரிகளை சந்தித்துள்ளது. இது வரவேற்கத்தக்க நிகழ்வாகும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை மேற்குலகம் குறிப்பாக அமெரிக்கா உட்பட ஏகாதிபத்திய சக்திகள் காட்டிக் கொடுத்துள்ளது என்றே கூறவேண்டும். இதேநேரம் தமிழ் தலைமைகள் இடதுசாரித் தளத்தில் உள்ள நம்பிக்கையை விட வலதுசாரி சக்திகள் மீதே அதிக நம்பிக்கை வைத்து செயற்பட்டு வந்தனர். தற்போது தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கான ஆதரவினை உலகில் உள்ள சோசலிச சக்திகளின் மத்தியில் இருந்தே பெறப்பட வேண்டும். இதற்காக தமிழ் தலைமைகள் கடுமையாக உழைக்க வேண்டும். தென் பகுதி பேரினவாதம் தம்மை ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்தியாக அடையாளம் காட்டி ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளின் ஆதரவை தம்பக்கம் இழுக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளன. இதற்கு இலங்கையில் இருக்கும் பாரம்பரிய இடதுசாரிகளின் தமிழ் அங்கத்தவர்கள் ஊடாக முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இலங்கை வரலாற்றில் பாரம்பரிய இடதுசாரி கட்சிகள் விட்ட தவறே இந்த நாடு இருளுக்குள் பயணிக்கும் நிலையை தோற்றுவித்தது. தற்போதும் இக் கட்சிகளின் செயற்பாடு அத்தகைய நிலையை நோக்கிய பயணத்திற்கே உதவுவதாக உள்ளது. தமிழ் தேசிய கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் விடுதலையை உண்மையில் விரும்பினால் இந்திய மத்திய அரசுடன் செலவிடும் நேரத்தை இந்திய இடதுசாரிகளுடன் செலவிட்டால் அது தமிழ் மக்களின் விடுதலைக்கு பாரிய சக்தியை ஏற்படுத்துவதாக அமையும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் வெற்றி பெற தமிழ் நாட்டின் எல்லை கடந்த ஆதரவை பெறுவதற்கான முயற்சிகள் ஒரு போதும் முன்னெடுக்கப்படவில்லை.

தமது தொகுதி பக்கம் கூட செல்வதற்கு முயற்சி செய்யாத பல தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்றும் உள்ளனர். இவர்கள் தமிழ் நாட்டின் எல்லையைக் கடந்து தமிழ் மக்களின் விடுதலைக்கு ஆதரவை தேடுவார்களா? என்பது சந்தேகமே.ஆனால் அத்தகைய முயற்சிகள் இல்லாது எமது விடுதலையை ஒருபோதும் எட்டமுடியாது. பாலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டம் சர்வதேச முற்போக்கு சக்திகளின் ஆதரவினை பெற்று வருகின்றது. ஆனால் எமது விடுதலைப் போராட்டம் அத்தகைய நிலைமைகளை இன்னும் எட்டவில்லை எட்டுவதற்கான முயற்சிகளிலும் ஈடுபடவும் இல்லை. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கான தென் இலங்கை ஆதரவினை கூட பெறுவதற்கு போதியளவு முயற்சிகள் இதுவரை மேற்கொள்ளப் படவில்லை.

இன்று தமிழ் தேசிய கூட்டமைப்பு இந்திய ஆழுந்தரப்பையும் இலங்கை ஆழும்தரப்பையும் சந்திப்பதில் காலத்தை வீணடித்து வருகின்றது. இறுதியில் எம்மை ஏமாற்றி விட்டனர் என்று வெட்கம் இல்லாமல் கூறுவார்கள், இதுவே வரலாறு முழுவதும் நடந்த உண்மையாகும். தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் உள்ள நியாயத்தை, தர்மத்தை உலகெங்கும் எடுத்துக் கூறப்படவேண்டும். எமக்கு ஆதரவை வழங்கக் கூடிய தோழமை சக்திகளை அடையாளம்கண்டு செயற்படவேண்டும். தற்போது தமிழ் தேசிய கூட்டமைப்பினர் இந்திய இடதுசாரி கட்சிகளை சந்திக்க முடிவு செய்தது நல்லதொரு செயற்பாட்டின் ஆரம்பமாக கொண்டு அந்த முயற்சிகள் மேலும் தொடரவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

வாகர்களுக்கு..!
உங்கள் கருத்துக்களை தவறாது எழுதுங்கள் மாற்றுக் கருத்துக்களாயினும் பிரசுரிப்போம்.உங்கள் ஆதரவு எங்கள் பணிகளை ஊக்குவிக்கும்

தொடர்பு முகவரி

வாசகர் கருத்துக்களம்
புதிய சமதர்மம்
143 /3 கீயு வீதி கொழும்பு.02
தொ.பேசி.2430621 தொ.மடல்.2305963
putiyasamadarmam143@gmail.com
இணையத்தளம்: www.nssp.info

# தேசவழமை

இலங்கையின் சிங்கள- தமிழ் உறவுகள் பற்றிய பிரச்சினை இன்றைய மோதல் நிலையை அடைந்த நாள் தொட்டு சிங்களப் பேரினவாதிகள், யாழ்ப்பாணத்தில் வழக்கிலுள்ள தேசவழமைச்சட்ட அடிப்படையில் வெளியார் யாழ்ப்பாணத்தில் காணியும் சொத்தும் வாங்க இயலாது தடுக்கிறது என்ற அடிப்படையில் தேசவழமைச் சட்டத்தைத் தாக்குவது பற்றிக் குறிப்பான கவனஞ் செலுத்தி வருகின்றனர்.

இது ஒரு தவறான கருத்து என்பதோடு, இரு சமூகங்களிடையிலுமான நல்லுறவிற்காகத் திருத்தப்பட வேண்டியதுமாகும். அயல் ஆக்கிரமிப்பாளர் வருவதற்கு முன்பே யாழ்ப்பாணத்தில் வழக்கிலிருந்து வந்த சட்டமே தேச வழமையாகும். அப்போது அது எழுத்து வடிவில் இருக்கவில்லை. போர்த்துக் கேயரையடுத்து டச்சுக்காரர் யாழ்ப்பாணத்தை ஆள்வோராகியதும் இலங்கையின் பிற இடங்களிலும் போன்று, ஒவ்வொரு பகுதியிலும் வழக்கிலிருந்த சட்டத்திற்கு வரையப்பட்ட வடிவம் வழங்கியது போலவே அங்கும் செய்தனர். அச்சட்டமே தேசவழமை எனப்படலாயிற்று. அப் பேரிலேயே அதன் விளக்கம் அடங்கியுள்ளது.

கவனிக்கவேண்டிய முதலாவது அம்சம் ஏதெனின், இலங்கையின் குறிப்பிட்ட ஒரு சமூகத்துக்குரிய குறிப்பான ஒரு சட்டம் இது மட்டுமல்ல. இவ்வாறான விசேட சட்டங்கள் மேலும் இரண்டு உள்ளன. அவை முறையே கண்டியச் சட்டமும் முஸ்லிம்களுக்கான சட்டமும் ஆகும். கண்டியச் சட்டமென்பது, கண்டியமாகாணங்களினின்று வரும் கண்டியர் கட்குச் செல்லுபடியாகும் வழமைசார்ந்த சட்டமாகும். அது கண்டியச் சட்டமெனப்பட்டாலும் அது கண்டிய மாகாணச் சிங்களவர் அனைவருக்கும் உரிய சிங்களச் சட்டமாகும். முஸ்லிம் சட்டமென்பது இஸ்லாம் மதத்தை, அதாவது ஒரே கடவுளையும் முகம்மது நபிகளின் தீர்க்கதரிசித் தன்மையையும் ஏற்பவர்களுக்குரியது. அவர்கள் பிறப்பாலோ மத மாற்றத்தாலோ முஸ்லிம்களாக இருக்கலாம். இலங்கை முஸ்லிம்களிற் பெருவாரியானோர் ஷா·பி சிந்தனை மரபுக்குரியவர்கள்.

தேசவழமை என்பது வடமாகாணத்தில் வதியும் தமிழருக்குரிய வழமைசார்ந்த சட்டமாகும். தேசவழமை விதிமுறைகளின் படி, இம்முறை யாழ்ப்பாண மாகாணத்தின் மலபார் குடிமக்களிடையிலான சகல விவகாரங்கட்கும் அல்லது மலபார் குடிமக்களுள் ஒருவர் பிரதிவாதியாக உள்ள வழக்குகட்குச் செல்லுபடியாகும். இங்கு மலபார் என்பது தமிழ் என்பதற்குச் சமானமாகப் பாவிக்கப்படுகிறது. யாழ்ப்பாண மாகாணம் என்பது மன்னாரையும் முல்லைத்தீவையும் உள்ளடக்கும். திருகோணமலையையும் மட்டக்களப்பையும் உள்ளடக்காது.

சொத்தும் காணியும் தொடர்பான சட்டமே சிங்களப் பேரினவாதிகளின் தாக்குதலின் இலக்காக இருந்துவந்துள்ளது. தேசவழமைச் சட்டத்தின் கீழ், விற்பனைக்குரிய ஒரு சொத்தை மற்றொருவரும் வாங்கும் உரிமையைத் தடுக்கும் வசதி இரு வகையானவர்கட்குச் சார்பாக அமைந்துள்ளது.



சண்முகதாசன் கட்டுரைகள் என்ற நூலில் இருந்து பெறப்பட்டது

இவ்வாறான தடை உரிமை இருவகையானோரால் மட்டுமே செயற்படுத்தப்படக் கூடும்:

(1) விற்க இருக்கும் சொத்தை விற்க விரும்புவோருடன் சக உடைமையாளராக இருப்போர்,

(2) விற்க விரும்புகிறவர் இறக்கும் பட்சத்தில் அவரது வாரிசுகளாக வரக்கூடியோர்.

விற்கப்படவுள்ள சொத்து அசையா ஆதனம் ஒன்றன் பிரிக்கப்படாத பங்காக இருந்தாலொழிய, இந்த உரிமையைப் பாவிக்க இயலாது. விற்க விரும்புகிறவர் சொத்தின் ஒரே உடைமையாளராக உள்ள பட்சத்தில் இந்த உரிமை செல்லாது.

தமிழரோ சிங்களவரோ முஸ்லிமோ, எந்த இலங்கைப் பிரசையும் விற்க விரும்புகிறவாறு தனியான உடைமையாக உள்ள எச்சொத்தையும் வாங்குவதைத் தேசவழமை தடைசெய்யவில்லை என்பது இதனால் தெளிவாகிறது. உண்மையில், இன்று யாழ்ப்பாணத்தில் தமிழரல்லாதோருக்குச் சொத்துக்கள் உள்ளன. தேசவழமையின் நோக்கம், ஒன்றுக்கும் அதிகமானவர்களின் கூட்டான உடைமையான காணியையோ, சொத்தையோ வெளியார் வாங்குவதைத் தடுப்பதேயாகும். கூட்டு உடைமையாகவுள்ள சொத்தில் பகுதியை வெளியார் வாங்க அனுமதிக்கப்படும் போது, தகராறுகட்கும் பகைமைக்கும் இடம் ஏற்படுகிறது என்பது தெளிவு.

இச்சட்டம் தமிழருக்கு எதுவிதமான சிறப்பான சலுகையையும் வழங்கவில்லை. டச்சுக்காரர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போது அங்கு எழுதா வழக்கதிலிருந்த சட்டமே அது. டச்சுக்காரர் எடுத்த முடிவு, அதற்கு வரையறுத்த வடிவம் வழங்கியது மட்டுமே.

இலங்கைப் பிரசைகள் அனைவருக்குமான ஒரே சட்டத் தொகுப்பை வகுக்க இயலும் ஆனால், தேச வழமை தமிழருக்குக் சிறப்புச் சலுகைகளை வழங்குகிறது என்ற அடிப்படையில் தமிழர் மீது பகைமை உணர்வைக் குவிப்பது நியாயமாகாது.

இப்பத்திரிகை லீனஸ் ஜயதிலக என்பவரால் கொழும்பு 02, ஒஸ்வின் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது